மலிவான அரசியல் செய்து மக்களிடையே பிரிவினை வாதத்தை ஏற்படுத்தக் கூடாது!

# நாட்டின் மீதும் நாட்டு மக்கள் மீதும் பிரதமர் கவனம் செலுத்துவதே நல்லது!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, நவ. 2-

மலிவான அரசியல் செய்து மக்களிடையே பிரிவினை வாதத்தை ஏற்படுத்தக் கூடாது. அற்ப அரசியலை நிறுத்தி விட்டு நாட்டின் மீதும் நாட்டு மக்கள் மீதும் பிரதமர் கவனம் செலுத்துவதே நல்லது என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-


தினகரன்

நவம்பர் 1, 2025 சனிக்கிழமை

பிரிவினை வளர்ப்பதா?

பீகார் மாநில தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. தேர்தல் பிரசாரத்தின் போது, “தமிழ்நாட்டில் பீகார் மாநில தொழிலாளர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள்” என பிரதமர் மோடி பேசி இருக்கும் பேச்சு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளதோடு அரசியல் களத்தில் பெரும் அதிர்வலையை உருவாக்கி உள்ளது. தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இவரைப்போலவே அனைத்து கட்சி அரசியல் தலைவர்களும் தங்களது கண்டனத்தை பதிவுசெய்து வருகின்றனர். “தி.மு.க வேறு, தமிழர்கள் வேறு அல்ல. இது தமிழ்நாட்டு மக்களை கொச்சைப்படுத்தும் செயல் ஆகும். பிரதமர் மோடி அந்த கருத்தை திரும்ப பெற வேண்டும்” என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை கண்டனம் தெரிவித்துள்ளார்.

பீகார் மாநில தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. தேர்தல் பிரசாரத்தின் போது, “தமிழ்நாட்டில் பீகார் மாநில தொழிலாளர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள்” என பிரதமர் மோடி பேசி இருக்கும் பேச்சு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளதோடு அரசியல் களத்தில் பெரும் அதிர்வலையை உருவாக்கி உள்ளது. தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இ வ ரை ப் போ ல வே அனைத்துக் கட்சி அரசியல் தலைவர்களும் தங்களது கண்டனத்தை பதிவுசெய்து வருகின்றனர். “தி.மு.க. வேறு, தமிழர்கள் வேறு அல்ல. இது தமிழ்நாட்டு மக்களை கொச்சைப்படுத்தும் செயல் ஆகும். பிரதமர் மோடி அந்த கருத்தை திரும்பப் பெற வேண்டும்” என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை கண்டனம் தெரிவித்துள்ளார்.

வழக்கமாக தேர்தல் பிரசாரத்தின் போது மக்களிடையே மொழி, இனம், மதம் அடிப்படையிலான பிரிவினையை பேசி தேர்தல் ஆதாயம் அடைவது என்பது பா.ஜ.விற்கு கைவந்த கலையாக இருந்து வருகிறது. ஒடிசா மாநில சட்டமன்ற தேர்தல் நடந்தபோது, அங்கு பணியாற்றி வந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் மீது பிரதமர் மோடி சாடினார். அவர் மட்டுமின்றி, உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்ளிட்ட ஒன்றிய அமைச்சர்கள் அனைவரும் தமிழ்நாட்டை சேர்ந்த அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரியை குறிவைத்து விமர்சனம் செய்தனர்.

பீகாருக்குச் சென்றால் - பீகார் மக்களைப் பற்றி பேசாமல், தமிழர்களைப் பற்றி பேசுவது, ஒடிசாவுக்கு சென்றால் அம்மாநில மக்களை பற்றி பேசாமல் தமிழர்களை பற்றி விமர்சனம் செய்வது என எங்கு சென்றாலும் தமிழர்களை வசைபாடுவது பிரதமருக்கு வாடிக்கையாகி விட்டது. இதன்மூலம், பா.ஜ.வினர், உண்மையிலேயே தமிழ், தமிழர்கள், தமிழ்நாட்டிற்கு எதிரானவர்கள் என்பதை பிரதமர் மோடி மீண்டும் நிரூபித்துள்ளார்.

பிரதமர் மட்டுமின்றி, பா.ஜ. தலைவர்கள் ஒவ்வொருவரும், வடமாநிலங்களில் நடக்கும் சட்டமன்றத் தேர்தலின் போது, தங்களது தேர்தல் ஆதாயத்துக்காக தமிழர்களின் மீதான வன்மத்தை வெளிப்படுத்துவது தொடர் கதையாக உள்ளது.

வெறும் வாக்கு வங்கிக்காக வாயில் வந்ததை பேசி, தமிழ் மக்களின் வலையில் சிக்கி, வதைபடக்கூடாது. தலைமை பொறுப்பில் இருப்பவர், தான் சொல்கிற ஒவ்வொரு சொல்லும் முக்கிய மானது, கவனிக்கத்தக்கது.

இந்திய அரசியல் அமைப்பு சட்டம் 8வது அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, 22 மொழிகள் பேசும் பன்முகத்தன்மை கொண்ட மக்கள் வாழும் இந்த இந்திய தேசம், வேற்றுமையில் ஒற்றுமை காண்கிறது. இப்படிப்பட்ட அமைதியான சூழல் நிலவும் போது, ஜாதி ரீதியாக, மத ரீதியாக, இனம் ரீதியாக மக்களிடையே பிரிவினையை வளர்ப்பது, தமிழர்களுக்கும், பீகார் மக்களுக்கும் இடையே பகையை உண்டாக்குவது என பா.ஜ. கீழ்த்தரமான அரசியல் செய்வது நாட்டுக்கு நல்லதல்ல. இந்த அற்ப அரசியலை நிறுத்திவிட்டு, நாட்டின் மீதும், நாட்டு மக்கள் மீதும் பிரதமர் கவனம் செலுத்துவதே நல்லது.

தலைவன் என்பவர், அனைத்து மக்களையும் அரவணைத்து செல்ல வேண்டும். பொறுப்புடன் செயல்பட வேண்டும். தன்னம்பிக்கை தரும் பேச்சை வெளிப்படுத்த வேண்டும். மாறாக, தேர்தல் ஆதாயத்திற்காக ஒற்றுமையாய் வாழும் மக்களிடையே சண்டையை உருவாக்கும் அபத்தமான செயலில் இறங்கக் கூடாது. ஒரு மாநிலத்தில் ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்ற முனைப்பில், மலிவான அரசியல் செய்து, மக்களிடையே பிரிவினை வாதத்தை ஏற்படுத்தி விடக்கூடாது. தலைவன் என்றும் தன்நிலை மறக்கக்கூடாது, தடுமாறக்கூடாது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (01.11.2025) தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் சென்னை, கிண்டியில் 118 ஏக்கர் பரப்பில் மாபெரும் சுற்றுச்சூழல் பூங்காவில், முதற்கட்டமாக நீர்நிலைகளின் கரைகளை சீரமைக்கும் பணிகள், அரியவகை மரங்கள், அழகிய மலர்ச் செடிகள் நடவு செய்தல் மற்றும் நாற்றங்கால் பணிகள் ஆகியவற்றை தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் கணபதி, பிரபாகரராஜா, அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு. மகேஷ் குமார், இந்து குழும இயக்குநர் என். ராம், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திண்டுக்கல் மேற்கு மாவட்டம்

## பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

### தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தில், பொதுக் குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட கேஎஸ்எஸ் எம்.சேக் சிக்கந்தர் பாட்சா அவர்கள் நத்தம் மத்திய ஒன்றியக் கழக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதால்;

திண்டுக்கல் மேற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதை யொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, நவம்பர் 4 (செவ்வாய்க்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 31.10.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# பா.ஜ.க.வின் பிரித்தாளும் சூழ்ச்சிகளை தமிழ்நாடு மட்டுமல்ல; இந்தியா ஏற்காது!

## முதல்வர் மு.க.ஸ்டாலினை புகழ்ந்து வரும் வட மாநிலத்தவர்!



பீகார் தேர்தல் பிரச்சாரத்தில் பிரதமர் மோடி அவர்கள் தமிழர்களை இழிவுபடுத்தி பேசி வருகிறார்!

இப்போது மட்டுமல்ல தமிழ்நாட்டையும் தமிழர்களையும் இழிவுபடுத்துவது பா.ஜ.க.வின் அற்பத்தனமான நடைமுறை என்பதை அனைவரும் அறிவார்கள்!

பீகார் மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரம் செய்யவந்த பிரதமர் மோடி அவர்கள் பீகார் மக்களுக்கு ஒன்றிய அரசு செய்த சாதனைகளை திட்டங்களை எடுத்துச் சொல்லாமல் பீகாரைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு தமிழ்நாட்டில் தி.மு.க.வினர் துன்பம் இழைப்பதாக ஒரு பொய்யான செய்தியை கூறி தமிழர்கள் மீது வன்மத்தை வெளிப்படுத்தி உள்ளார். இந்தச் செய்தியை அறிந்தவுடன் தமிழ் மக்கள் வேதனை அடைந்து வருகிறார்கள்.

**இதுதொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளியிட்டுள்ள வலைதளப் பதிவில்,**

**“இந்த நாட்டிலுள்ள அனைவருக்குமான மாண்புமிகு பிரதமர் பொறுப்பில் இருக்கிறோம் என்பதையே நரேந்திர மோடி அவர்கள் அடிக்கடி மறந்து, இதுபோன்ற பேச்சுகளால் தன்னுடைய பொறுப்புக்குரிய மாண்பை இழந்துவிடக் கூடாது என்று ஒரு தமிழனாக வேதனையுடன் கேட்டுக் கொள்கிறேன்.**

**ஒடிசா பீகார் என்று எங்கு சென்றாலும், பா.ஜ.க.வினர் தமிழர்களின் மீதான வன்மத்தைத் தேர்தல் அரசியலுக்காக வெளிப்படுத்துவதற்குத் தமிழ்நாட்டு மக்களின் முதலமைச்சர் என்ற முறையில் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**பன்முகத்தன்மை கொண்ட, வேற்றுமையில் ஒற்றுமையைக் காணும் பெருமைமிக்க இந்தியாவில், இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பகையை வளர்ப்பது, தமிழர்களுக்கும் பீகார் மக்களுக்கும் பகை உண்டாக்கும்படி நடந்துகொள்வது போன்ற அற்ப அரசியல் செயல்பாடுகளை நிறுத்திவிட்டு, நாட்டின் நலன் மீது பிரதமரும் பா.ஜ.க.,வினரும் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்துகிறேன்”.**

**என குறிப்பிட்டுள்ளார்கள்.**

**தமிழர்கள் ஏற்கனவே பா.ஜ.க.வால் இழிவு படுத்தப்பட்ட முன் நிகழ்வுகள்**

தமிழர்கள் மீதும் தமிழ்நாட்டின் மீதும் இப்படிக் குறை கூறி மக்களைத் திசை திருப்பும் போக்கு இப்போது மட்டுமல்ல பா.ஜ.க.வினரால் முன்பே பல முறை கூறப்பட்டுள்ளது.

ஒடிசா மாநிலத்தில் முதலமைச்சராக இருந்த நவீன் பட்நாயக் அவர்களின் நம்பிக்கையைப் பெற்று அவருடைய தனிச் செயலாளராக பணியாற்றியவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த பி.கே. பாண்டியன் என்பதால், ஒடிசா மாநிலத்தில் நடைபெற்ற தேர்தலின் போது பூரி ஜெகந்நாதர் கோயில் ஆலயக் கருவூலத்தின் சாவி தமிழ்நாட்டில் இருக்கிறது என்று கூறியதுடன், ஒடிசாவை தமிழர்கள் ஆள்வதா என தமிழர்களை திருடர்கள் போல் கேவலப்படுத்தி ஒரு பொய்யான வதந்தியை கிளப்பிவிட்டவர்தான் பிரதமர் மோடி அவர்கள்.

தமிழ்நாடு முழுவதிலும் பல இலட்சக் கணக்கான வடமாநிலத் தொழிலாளர்கள் வந்து தங்கி கூலி வேலைகள் செய்து மாதந்தோறும் பல கோடி ரூபாயை வடமாநிலங்களில் உள்ள தத்தம் குடும்பங்களுக்கு அனுப்பிக்கொண்டு அமைதியாக வாழ்ந்து வருவதை இன்றும் காணலாம்.

2023ஆம் ஆண்டில் ஹோலிப் பண்டிகையை கொண்டாடுவதற்காக வடமாநிலத் தொழிலாளர்கள் இரயில் மூலம் அவர்களது சொந்த மாநிலத்திற்கு பயணம் செய்யப் புறப்பட்ட காட்சிகள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பானது. இதை மையப்படுத்தி தமிழ்நாட்டில் வடமாநிலத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டார்கள், அதனால் தங்கள் மாநிலங்களுக்கு திரும்புகிறார்கள் என்று அபாண்டமான ஒரு பொய்ச் செய்தியை பரப்பினார்கள். செய்தி வெளிவந்தவுடன் முதலமைச்சர் அவர்களே நேரிடையாக தலையிட்டு வடமாநிலத் தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் தாக்கப்படவில்லை. அவர்கள் எல்லாம் அமைதியாக வாழ்கிறார்கள் என்பதை தொழிலாளர்களைச் சந்தித்து அவர்கள் கூறிய தகவலின் அடிப்படையில் பொய்ச் செய்தியை மறுத்தார்கள்.

தமிழ்நாட்டில் வடமாநிலத்தவர்கள், குறிப்பாக பீகார் மாநிலத் தொழிலாளர்கள் தாக்கப்படுவதாகவும் அவர்கள் பாதுகாப்பற்ற சூழலில் இங்கு வாழ்வதாகவும் அடிப்படையற்ற வதந்திகளை பரப்பிய வடமாநிலத்தைச் சேர்ந்த மனிஷ் காஷ்யப் எனும் யூடியூபர் கைது செய்யப்பட்டார்.

கொரோனா காலத்தில் புலம்பெயர்ந்து வந்து தமிழ்நாட்டில் வேலை செய்யும் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்காக பல்வேறு உதவிகளும் சலுகைகளும் அளிக்கப்பட்டன. அவர்கள் சொந்த மாநிலங்களுக்குச் செல்ல விரும்பியவர்களுக்கு ஆங்காங்கே இரயில் நிலையங்களில் உதவி முகாம்கள் அமைக்கப்பட்டு அவர்களுக்கு உதவிகள் செய்யப்பட்டன.

கொல்கத்தாவில் நிகழ்ந்த மேம்பால விபத்தில் 26 பேர் உயிரிழந்தபோது, அதனைக் கடவுளின் செயல், மமதா ஆட்சியில் இருக்கக் கூடாது என கடவுள் அனுப்பிய செய்தி என்று மக்களின் இறப்பையும் பிரதமர் மோடி கொச்சைப்படுத்திப் பேசினார்.

இந்தியா முழுக்கப் பணிக்காகப் புலம்பெயர்ந்து வாழும் மேற்கு வங்க முஸ்லீம்களை “பங்ளாதேசி” என பா.ஜ.க. வெறுப்பை விதைக்கிறது.

வன்முறையாளர்களை அவர்கள் அணிந்துள்ள ஆடையை வைத்தே அடையாளம் காணலாம் எனவும் இஸ்லாமிய மக்களைக் குறிவைத்துப் பிரதமர் மோடி இழிவாகப் பேசியுள்ளார்.

இது ஒரு நாட்டின் பிரதமர் பொறுப்பில் இருப்பவர் பின்பற்றும் நடைமுறையாக இருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

வந்தாரை வாழ வைக்கும் தமிழ்நாடு இது. இதனை நம்மை விட வடமாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டுக்கு வந்து வாழும் மக்களே அழுத்தமாகச் சொல்வார்கள். தனியார் தொலைக்காட்சி நடத்திய விவாத மேடையில் பேசிய வடமாநிலத்துப் பெண் ஒருவர் பேசிய பேச்சு ஒன்று. சமூக ஊடகங்களில் ஒரு முறை அதிகம் பரவியது. அது,

“முடியாத தனது குழந்தையைத் தூக்கிக் கொண்டு தமிழ்நாட்டுக்கு வாழ வந்த நான். ரேஷன் கார்டு பெற்று, அதன் மூலமாக முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பல இலட்சம் ரூபாய் மதிப்பிலான சிகிச்சையை இலவசமாகச் செய்ய முடிந்தது. இப்போது என் குழந்தை பேசுகிறது. இதற்கு தமிழ்நாடு தான் காரணம்” என்று அளித்த பேட்டியானது யாராலும் மறக்க முடியாதது. தாய்த் தமிழ்நாடு என்பது மனித குலத்துக்கு மகத்தான உதவி செய்யும் கருணைத் தொட்டிலாகவே எப்போதும் இருந்துள்ளது. இனியும் அப்படித்தான் இருக்கும்”.

பா.ஜ.க. சொல்லும் பாதக மொழிகளை, பிரித்தாளும் சூழ்ச்சிகளை தமிழ்நாடு மட்டுமல்ல; இந்தியா ஏற்காது!






கடமை ! கண்ணியம் !! கட்டுப்பாடு !!!

விரும்பினாலும்! விரும்பாவிட்டாலும்! அரசியல் பழகு தோழா!!!

கொழுந்தாய் அம்மாள் சீரங்கன் மாளிகை & வர்ஷிகா இல்ல திறப்புவிழா & மரக்கன்றுகள் நடும் விழா

நாள் : 02.11.2025 - ஞாயிற்றுக்கிழமை

விழாவை தொடங்கி வைப்பவர் :
சேலம் மத்திய மாவட்ட செயலாளரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான
மாண்புமிகு. இரா. ராஜேந்திரன், B.A., B.L., அவர்கள்

வாழ்த்துரை :
திருமிகு : இரா.அதியமான் அவர்கள் நிறுவன தலைவர், ஆதி தமிழர் பேரவை.

அழைப்பின் மகிழ்வில் அன்புடன்

உதயசூரியன் சீ.வை (எ) வையாபுரி,
துணை அமைப்பாளர் அனமப்புசாரா ஓட்டுநர் அணி சேலம் மத்திய மாவட்டம் திமுக. சேலம் வடக்கு ஒன்றியம்.

8838373169

இடம் : பிளாட் எண் : 35 நீலா கார்டன் புதுரோடு மல்லமூப்பம்பட்டி, (தனபாக்யம் மண்டபத்திற்கு பின் புறம்) சேலம் - 636302.